Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.234/2025

Dated 18-02-2026
Deposition of witness for : PW 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அன்னக்கிளி | வயது | : | 32 |
| கணவர் பெயர் | : | வெங்கடேசன் | தாலுக்கா | : | அரியலூர் |
| கிராமம் | : | அரியலூர் | தொழில் | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused absent 355 BNSS Petition filed and allowed.**

Ld.D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது சுவாமிமலை காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன்.

2) கடந்த 19.10.2024 அன்று திருவையாறு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது அன்று காலை சுமார் 7.00 மணியளவில் காவலர் 1176 இக்னேசி டேனியல், 2839 மோகன் ஆகியோர்களுடன் ரோந்து பணியில் இருந்தபோது திருவையாறு - விளாங்குடி மெயின்ரோட்டில் கஸ்தூரிபாய் நகரில் கல்யாணபுரம் கார்த்தி,

த/பெ.நெடுஞ்செழியர் என்பவர் பெரிய வாளை வைத்துக்கொண்டு பொதுமக்களை அச்சுறுத்தியும் ஆபாச வார்த்தைகள் சொல்லி திட்டிகொண்டிருந்ததாக கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்று பார்த்தபோது எதிரிகார்த்தி திருவையாறு காவல்நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என தெரியவந்தது.

3) பின்பு சம்பவ இடத்தில் சாட்சிகள் இனியா சுரேஸ் மற்றும் முருகானந்தம் ஆகியோர்கள் முன்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.3** ஆகும்.

4) அவரை குற்றம் காரணம் கூறி சுமார் 7.30 மணியளவில் கைது செய்து அவர் கொடுத்த வாக்குமூலத்தை சாட்சிகள் என்னுடன் வந்த மேற்படி காவலர்கள் முன்பாக பதிவு செய்தேன்.

5) பின்பு சுமார் காலை 9.15 மணிக்கு எதிரி வைத்திருந்த வாளை மகஜரில் சாட்சிகள் அதே சாட்சிகள் முன்பு கைப்பற்றினேன். பின்பு எதிரியை 10 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நிலைய கு.எண்.542/2024 சட்டப்பிரிவு 296(பி) 351(3) BNS r/w 25(1A) Arms Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும்.

6) பின்பு எதிரியை திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றிய தடய பொருளை நீதிமன்றத்திற்கு படிவம் 91 மூலம் ஒப்படைத்தேன். அந்த படிவம் **அ.சா.ஆ.5** ஆகும்.

7) பின்பு சாட்சிகள் என்னுடன் ரோந்து பணியில் வந்த காவலர் காவலர் 1176 இக்னேசி

டேனியல், 2839 மோகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பார்வை மகஜர் சாட்சிகள் இனியா சுரேஸ் மற்றும் முருகானந்தம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

8) பின்பு என் விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவு 296(பி) 351(3) BNS r/w 25(1A) Arms Act ன் இறுதி குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) நானே புகார்தாரராகவும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு நானே இறுதி அறிக்கை தாக்கல் செய்தது என்பது சட்டத்திற்கு முரணானது என்றால் சரியல்ல.

2) நான் தனி நபர் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் யாரும் முன் வரவில்லை.

3) யார் யார் முன் வரவில்லை என்று அவர்களுக்கு அறிவிப்பு கொடுத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிப்பு எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

4) தனி நபர்கள் முகவரி பெயர் தெரியாது என்றால் சரிதான்.

5) நான் கண்டியூர் அருகே ரோந்து செல்லும்போது தகவல் கிடைத்தது. என்னுடன் வந்த காவலரிடம் இருந்து கையேடு கைப்பற்றி தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

6) எதிரி ஏற்கனவே எங்கள் காவல்நிலையத்தில் அறிமுகமான நபர் என்றால் சரிதான்.

குற்றப்பதிவேடு சரித்திர குற்றவாளி ஆவார்.

7)இந்த சம்பவம் குறித்து தனி நபர் யாராவது புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை.

8) எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் அவரை வீட்டில் இருந்து அழைத்து வந்து காவல்நிலையத்தில் வைத்துதயார் செய்யப்பட்ட ஆவணங்களின்படி பொய்யான புகார் தயார் செய்யபட்டு எதிரி மீது ஒரு பொய்யான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9) கைப்பற்றுதல் மகஜரில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஓம்/-P.வேல்முருகன்

முதன்மை மாவட்ட நீதிபதி

தஞ்சாவூர்